**உலகத்தமிழ்க் களஞ்சியம் (மூன்று தொகுதிகள்) - பதிப்பாசிரியர்: இ.ஜே.சுந்தர்; ரூ.2700; உமா பதிப்பகம், கோலாலம்பூர்; விற்பனை உரிமை: ரிதம் நூல் பகிர்வாளர்.**




தமிழ், தமிழர், தமிழ்நாடு தொடர்பான 16 ஆயிரத்துக்கும் மேற்பட்ட செய்திகள், 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்கங்களில் பதிவாகியுள்ளன. உலக நாடுகள் பலவற்றில் வாழும் தமிழர்கள் பற்றியும், அவர்கள் நடத்தி வருகிற தமிழர் அமைப்புகள், தமிழ்க் கல்வி நிலையங்கள், ஆலயங்கள் பற்றியும் பல செய்திகள் இந்நூலில் உள்ளன.

தமிழகத்தில் உள்ள ஊர்கள், ஆறுகள், இதழ்கள், தாவர, விலங்கு மற்றும் பறவை வகைகள், 2016 பிப்ரவரி மாதம் வரை வெளிவந்த தமிழ்த் திரைப்படங்களைப் பற்றிய தகவல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. தமிழ்நாட்டில் மறந்துபோன விளையாட்டுகள், ஆடை அணிகலன்கள், சமயங்கள், இலக்கியங்கள், ஓவியங்கள் என அனைத்துச் செய்திகளும் அகரவரிசைப்படி இடம் பெற்றுள்ளன.

'' தமிழில் வல்லமை பெற்ற அறிஞர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் ஓர் எடுநூலாக (ரெஃபரன்ஸ்) இந்நூல் உறுதியாகத் திகழும். ஏற்பான இடங்களில் தெளிவான ஒளிப்படங்கள், அழகான ஓவியங்கள், வரைபடங்கள் இடம் பெற்றுள்ளன'' என்று தமிழறிஞர் க.ப.அறவாணன் இந்நூல் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

தினமணி 14.01.2019